සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

தரம் 5 மாணவர்களுக்கான நிகழ்நிலைப் பரீட்சை - 2021

பரீட்சை – 06

சுட்டெண் :- .....

வினாத்தாள் – I

நேரம் :- 1 மணித்தியாலம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	


	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய மேற்பார்வையாளர்	

www.ikeou.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

* **தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

1. **கட்டத்தின் உள்ளே உள்ள உருவத்திற்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள உருவின் கீழ் கோடிடுக?**





(1)



(2)



(3)

2. **உரு A யை ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?**



உரு A




உரு B

(1) 3 (2) 2 (3) 4

* **3, 4 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான பிராணி மற்றும் உரு எதுவெனத் தெரிவு செய்க?**

3.





(1)





(2)



(3)

4.





(1)




(2)



(3)

සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

5. முதல் உருவினை ஆக்கத் தேவையான பகுதிகளைச் சரியாகக் காட்டும் விடை எது?




(1) B,D,E,A (2) B,C,D,E, (3) A,B,E,F

6. வெற்றிடத்தில் வரவேண்டிய மிகச் சரியான உரு எது?



7. பெட்டியொன்றிலிருந்த பச்சை நிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப்பந்துகளினதும் எண்ணிக்கை 60 எனின் உருவிலுள்ள தகவல்களுக்கேற்ப பச்சைநிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப் பந்துகளினதும் எண்ணிக்கை முறையே ?

(1) 30 , 45
(2) 15 , 30
(3) 45, 15




8. A,B,C,D ஆகிய நான்கு எழுத்துக்களையும் பயன்படுத்தி எத்தனை எழுத்துச் சோடிகளை உருவாக்க முடியும்?

(1) 7 (2) 6 (3) 5

9. உருவின் தகவல்களுக்கு ஏற்ப எறும்பானது A என்ற இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து மீண்டும் A என்ற இடம் வரை பயணிக்க வேண்டிய தூரம் யாது?

(1) 40 cm
(2) 38 cm
(3) 42 cm



10. 31 நாட்களைக் கொண்ட மாதமொன்றில் 5ம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இம்மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளினதும், திங்கட்கிழமைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 9 (3) 10

11. கீழே மூன்று சொற்சோடிகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு சோடிகள் சமனான தொடர்புடையவை. ஒரு சோடி சமனில்லாத தொடர்புடையது. அச் சோடியைத் தெரிவு செய்து கோடிடுக?

(1) வட்டம் - உருளை (2) முக்கோணி - கனவுரு (3) சதுரம் - சதுரமுகி

12. நாதன் 1kg அரிசியையும் 3kg மாவையும் வாங்கிக்கொண்டு அதற்காக ரூபாய் 380.00 கொடுத்தான். அவன் வாங்கிய 1kg அரிசியின் விலையை விட 1kg மாவின் விலை ரூபாய் 20.00 அதிகம் எனின் 1kg மாவின் விலை யாது?

(1) ரூபாய் 100.00 (2) ரூபாய் 80.00 (3) ரூபாய் 180.00


13. பஸ்வண்டியானது வீதியில் சமமான இடைத்தூரங்களில் அமைந்துள்ள 4 மின்கம்பங்களைக் கடந்து செல்வதற்கு 12 நிமிடங்கள் எடுத்தது எனின் 2 மின் கம்பங்களைக் கடந்து செல்வதற்கு எடுக்கும் நேரம் யாது?

(1) 6 நிமிடங்கள் (2) 4 நிமிடங்கள் (3) 8 நிமிடங்கள்

14. தனது கைக்கடிகாரத்தில் நேரம் 4.30 ஆக இருந்த போது, கடிகாரத்தின் நிமிடமுள்ளானது மேற்குத் திசையை நோக்கி இருந்ததை சந்துரு அவதானித்தான். அவ்வாறெனின், அவனது கடிகாரத்தின் மணிமுள் அப்போது எத்திசையை நோக்கி இருந்திருக்கும்?

(1) தென்கிழக்கு (2) வடகிழக்கு (3) தென்மேற்கு

*** உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை நேர் கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**



15. நேர் கோடுகள் வழியே வெட்டும்போது எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்?

(1) 25 (2) 30 (3) 27

16. மூன்று பக்கங்களுக்கு மாத்திரம் மை பூசப்பட்ட எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்

(1) 10 (2) 6 (3) 8

17. பேனையொன்றின் விலை ரூபாய் 22.00 ஆகும். மாதுரியிடம் இன்னும் ரூபாய் 10.00 இருந்தால் 4 பேனைகளை வாங்கலாம் அதன்படி, மாதுரியிடம் உள்ள பணம் யாது?

(1) ரூபாய் 88.00 (2) ரூபாய் 78.00 (3) ரூபாய் 98.00

18. பெட்டியொன்றில் 28 பென்சில்கள் உள்ளன. நீலப் பென்சில்களைப் போல் 2 மடங்கு சிவப்பு நிற பென்சில்களும், சிவப்பு நிற பென்சில்களைப் போல் 2 மடங்கு பச்சை நிறப் பென்சில்களும் இருந்தால் பெட்டியில் இருந்த பச்சை நிறப் பென்சில்கள் எத்தனை?

(1) 28 (2) 16 (3) 8


www.ikeduk

 සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

19. 39 ஒரே அளவான சிறிய சதுரமுகிகளைக் கொண்டு ஆகக்கூடுதலாக எத்தனை கனவுருக்களை உருவாக்க முடியும்?

(1) 20 (2) 19 (3) 21

20. தரப்பட்டுள்ள உருவில் எத்தனை அரை வட்டங்களை இனங்காண முடியும்?



(1) 8 (2) 12 (3) 10

21. காற்று வீசினால் குளிர்ச்சி அதிகரிக்கிறது. காற்று வீசவில்லை. எனவே,

(1) குளிர்ச்சி குறைகின்றது. (2) குளிர்ச்சி அதிகரிக்கின்றது (3) குளிர்ச்சி மாறவில்லை


22. சுதந்திரன் சேமித்த உண்டியலில் 5 ரூபாய் நாணயக் குற்றிகளும், இரண்டு ரூபாய் நாணயக் குற்றிகளுமாக மொத்தம் 20 உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி 61 ரூபாய் எனின், அவன் சேமித்த 5 ரூபாய் நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 13 (3) 8

23. பெட்டியொன்றிலே பிஸ்கட் பைக்கற்றுக்கள் 12 அல்லது தேயிலைப் பைக்கற்றுக்கள் 16 ஐ மட்டுமே வைக்க முடியும் எனின் அப் பெட்டியில் தற்போது 4 பிஸ்கட் பைக்கற்றுக்களுடன் எத்தனை தேயிலைப் பைக்கற்றுக்களை வைக்கமுடியும்?

(1) 9 (2) 6 (3) 3


24. கீழே தரப்பட்டுள்ள முதல் உருவை அமைப்பதற்குத் தேவையான வெட்டுருவைச் சரியாகக் காட்டும் விடை யாது?



(1) (2) (3)

25. A,B **ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம்** A **இல் உள்ள அரிசியின் அளவானது பாத்திரம்** B **இல் உள்ள அரிசியின் அளவிலும்**


(1) மிகக் குறைவானது
(2) சமனானது
(3) மிகக் கூடுதலானது



26. ஒரு வரிசையில் 42 பேர் உள்ளனர். முரளி வரிசையில் 24 ஆவதாக நின்றான். அவன் வரிசையின் நடுவே நிற்கவேண்டுமாயின் வரிசையில் இன்னும் எத்தனை பேரைச் சேர்க்க வேண்டும் ?

(1) 4 பேர்
(2) 5 பேர்
(3) 6 பேர்

සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

27. 

உருவில் தகரப் பேணி A யினால் காட்டப்பட்டுள்ள பகுதி இருட்டாக (இருண்டபகுதியாக) இருப்பதற்கு எந்த மின்குமிழ் ஒளிர வேண்டும்?

(1) P மின்குமிழ்

(2) Q மின்குமிழ்

(3) R மின்குமிழ்


28. **ஆங்கில எழுத்துக்களுக்கு பெறுமானம் வழங்கிய போது கிடைக்கும் மொத்தத் தொகை இலக்கத்தில் தரப்பட்டுள்ளது. அதன்படி D யின் பெறுமானம் யாது?**

C		A	
A	C	A	8
D		A	
9		9	


(1) 4 (2) 3 (3) 2

29. **உருவின் படி தராசு B யின் நிறை யாது?**


A



B




C



(1) 6 kg (2) 5 kg (3) 8 kg


30. **மீனா மாலை வேளையில் கடைத்தெருவிற்கு போகும் சரியான உரு எதுவாகும்?**



(1)



(2)



(3)


31. **சரியான கோவையைத் தெரிவு செய்க.**

(1) 6 x 8 + 8 = 58

(2) 7 x 7 x 2 = 99

(3) 66 - 33 + 10 = 43

32. கீழே தரப்பட்டுள்ள உருவுடன் தொடர்புடைய மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) பகுதி A ஆனது பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களுக்கும் உரித்தானதல்ல.

(2) பகுதி B, C, D ஆனது நீலம், பச்சை, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களுக்கும் பொதுவானது.

(3) பகுதி A ஆனது பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களுக்கும் உரியது.

33. தரப்பட்ட கடதாசி அட்டையினை மடித்து உருவாக்கப்பட்ட சதுரமுகிகளின் தோற்றம் அருகே தரப்பட்டுள்ளது. அதில் முன்பக்க முகத்தில் வரும் எழுத்து யாது?





(1) B (2) C (3) D

34. கணேஸ் ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை கணேஸ் இற்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?

(1) ரவி (2) கணேஸ் (3) மோகன்

35. 200 லீற்றர் கொள்ளளவுடைய தொட்டி ஒன்றிற்கு நிமிடத்திற்கு 40 லீற்றர் நீர் ஊற்றப்படும் அதேவேளை அத்தொட்டியிலிருந்து 20 லீற்றர் நீர் பூந்தோட்டத்திற்கு இறைக்கப்படுகின்றது. அத்தொட்டி முதல்முறையாக நிரம்புவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவைப்படும்?

(1) 9 நிமிடங்கள் (2) 12 நிமிடங்கள் (3) 16 நிமிடங்கள்

36. கூடையொன்றில் மஞ்சள் நிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு சிவப்பு நிறப் பூக்கள் உள்ளன. சிவப்புநிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு வெள்ளை நிறப் பூக்கள் உள்ளன. நீல நிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு சிவப்பு நிறப் பூக்கள் உள்ளன. அதன்படி கூடையில் ஒரேயளவான எண்ணிக்கை வீதம் உள்ள இரண்டு பூ வகைகள்


(1) நீலநிறப் பூக்கள், வெள்ளைநிறப் பூக்கள்

(2) மஞ்சள் நிறப் பூக்கள், நீல நிறப் பூக்கள்

(3) மஞ்சள் நிறப் பூக்கள் வெள்ளைநிறப் பூக்கள்

 සියලුම හිමිකම් ඇවිරිණි) முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved)

* தரப்பட்டுள்ள எழுத்தட்டையை அவதானித்து 37 ஆம் 38 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவுசெய்க.



37. தரப்பட்டுள்ள அட்டையைத் தளவாடியில் பிடிக்கும் போது "S" என்ற எழுத்து எத்தனையாவது நிரலில் தெரியும்?

(1) 1ஆவது (2) 2ஆவது (3) 3ஆவது

38. தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்கள் எவை?

(1) ACW (2) OAW (3) LKS

* வட்டவடிவான மேசையொன்றில் ஆறு மாணவர்கள் இருந்த விதம் கீழே தரப்பட்டுள்ளது.

* சபிக்ஷனுக்கு எதிரே சஷ்விகன் இருந்தான்.

* சஷ்விகனுக்கு இடது பக்கத்தில் இரண்டாவதாக நேத்திரன் இருந்தான்.

* தக்ஷிகன் யதுஷனுக்கு வலது பக்கத்திலும் நிகீஸிற்கு எதிரேயும் இருந்தான்.

39. தக்ஷிகனுக்கு இடது பக்கத்தில் இரண்டாவதாக இருப்பவர் யார்?

(1) சஷ்விகன் (2) நேத்திரன் (3) நிகீஸ்

40. சபிக்ஷனும் சஷ்விகனும் மாறி இருப்பார்களாயின் தற்போது சஷ்விகனுக்கு வலது பக்கத்தில் இருப்பவர் யார்?

(1) நேத்திரன் (2) தக்ஷிகன் (3) யதுஷன்

www.ikeduk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிகழ்நிலைப் பரீட்சை - 6 - 2021

வினாத்தாள் - II

சுட்டெண் :-	தரம் - 5	1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே எழுதுக.(சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும். (பயன்படுத்தவும்)

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T

www.ikeou.lk

01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

காலம் மாறியது காலனாக செல்பேசிகள் வந்தன. செல்பேசி அலைகள் சிட்டுக்குருவி இனத்தை அழித்தன. போதாதற்கு செயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள், மரங்களை வெட்டுதல், கட்டிடங்களின் வளர்ச்சி, வெப்பம் அதிகரிப்பது என எல்லாமே சேர்ந்து சிட்டுக்குருவிகளை ஒழித்துவிட்டது. மனிதனுக்கு தீமைகளை விளைவிக்கும் வைரஸ், பாக்டீரியாக்களை நாம் ஒழிக்கவில்லை. மனிதனை மகிழ்வித்த சிட்டுக்குருவிகளை ஒழித்துக்கொண்டிருக்கிறோம். மனிதர்களை நம்பும் எதையுமே நாம் விட்டுவைப்பதில்லையே! சின்ன சின்ன அசைவுகளால் நம்மை மகிழ்வித்த சிட்டுக்குருவிகள் அழிவின் விளிம்பில் உள்ளன.

பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) சிட்டுக்குருவி இனத்தை அழித்தவை எவை?

……

(ii) மனிதர்களுக்கு தீமைகளை விளைவிப்பவை எவை?

……

(iii) பந்தியில் வந்துள்ள அடுக்குமொழிச்சொல்லை எழுதுக.

……

(iv) "நன்மைகளை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

……

(v) அழிவின் விளிம்பில் உள்ளவை எவை எனப் பந்தியில் கூறப்பட்டுள்ளது?

……

(vi) இப்பந்தி எதைப்பற்றிக் கூறுகின்றது?

……

02) அ.்றிணை இறந்தகாலப் பன்மை வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) வந்தார்கள் (2) சென்றது (3) பிரகாசித்தன

03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

நண்பனுடைய / செயலைக் / கவிழ்ந்தான் / தலை / அவன் / தனது / கண்டு

……..

04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி "✓" எனவும் பிழையாயின் பிழை "×" எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) தந்தையும் தம்பியும் பாடசாலைக்குச் சென்றார்கள் ( )

(ii) பகலில் ஆகாயத்தில் பறவைகள் பறந்தது ( )

(iii) மீன்கள் குளத்தில் நீந்துகின்றன ( )

(iv) அக்கா மாணவர்களுடன் சுற்றுலா சென்றாள் ( )

05) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள்தானே எனக் கேட்டான்

06) (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.
ஆற்றிலே போட்டாலும் …….. போடு

www.lkedu.lk

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

எதையும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

……

07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புகுறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) எமது நாடு இயற்கை (வழம் / வளம்) நிறைந்தது.

(ii) தொற்று நோய் பற்றி நிகழ்த்திய (உறை / உரை) மிகவும் சிறப்பாக இருந்தது

08) பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

மாணவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

……

09) **ஆண்பால் சொல்லை எழுதுக.** யுவதி :……

10)

அழைப்பிதழ்

மலைச்சாரல் ஆரம்பப்பிரிவு மாணவர்களின்

கலைவிழா – 2021

காலம் : 20.11.2021
நேரம் : காலை 9.30 மணி
இடம் : புதிய கேட்போர் கூடம்

பிரதம அதிதி
பேராசிரியர் க. இராஜஇராஜசோழன்

சிறுவர்களின் திறமைகளைக் கண்டு மகிழ்வுற அன்புடன் அழைக்கின்றோம்.

05 பூங்காவீதி
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பெற்றோர், பழையமாணவர்கள்

(i) இவ் அழைப்பிதழ் யாருடைய கலை விழாவிற்குரியது?……


(ii) இவ் அழைப்பிதழ் யாரால் அனுப்பபட்டது?……


(iii) கலைவிழா நடைபெறும் இடம் எது?……

11) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) River ……. (ii) Stone …….

12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

…….. ……..

13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) canteen / are / They / the / in: ……..

(ii) want / sing / to / I : ……..

www.lkedu.lk


14) 'இரிதா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……..

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

மட்ட அய்யலா தென்னெக் இன்னவா : ……

16) எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.



……

17) பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

50099 ……

18) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.
5409, 5099, 5709

……....

19)

38	50
44	
32	26

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 6 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்குக.

……...

20) ஒரு தொழிற்சாலையில் 1046 பெண்களும் 938 ஆண்களும் வேலை செய்கின்றனர்.


(i) அத்தொழிற்சாலையில் உள்ள வேலையாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……...

(ii) அத்தொழிற்சாலையில் ஆண்களிலும் பார்க்க எத்தனை பெண்கள் கூடுதலாக வேலை செய்கின்றனர்?

……

21) பின்வரும் உருவில் $\frac{3}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனாவால்) நிறந் தீட்டுக.



22) 24 மணித்தியாலக் கடிகாரம் 12:30 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

……

23) 6246 இனை 6 இனால் வகுக்கும்போது கிடைக்கும் விடை யாது?

……

24) பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
கடலை	3kg	185	00	(i)……..	……..
உழுந்து	500g	(ii)……..	……	387	50
மொத்தப் பணம்				**942**	**50**

www.ikeou.lk

25) ஒரு தாங்கியில் 1500 லீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 850 லீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?


……

26) பை ஒன்றில் 8kg 450g பருப்பு இருந்தது அதற்குள் மேலும் 3kg 750g பருப்பு இடப்படுகின்றது இப்போது பையிலுள்ள பருப்பின் மொத்த நிறை யாது?

…..……kg …….g

27) நகரம் E இலிருந்து நகரம் D வரையுள்ள தூரம் 3km 850m ஆகும். நகரம் D இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 9km 250m ஆகும். நகரம் E இலிருந்து நகரம் D இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?

……. km ……..m

28)  இத்திண்மப் பொருளை அவதானித்து விடை எழுதுக.

(i) உருவில் காட்டப்பட்டுள்ள திண்ம உருவின் பெயரை எழுதுக……


(ii) இதில் உள்ள விளிம்புகள் எத்தனை? ……

29) பழக்கடை ஒன்றில் ஒரு வாரத்தில் விற்கப்பட்ட பழங்கள் தொடர்பான விபரங்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.

(i) தினமும் ஒரு மாம்பழம் விற்கப்பட்டது எனின் அவ்வாரத்தில் விற்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

……

……..



(ii) இவ்வாரத்தில் மிகக் கூடுதலாக விற்கப்பட்ட பழத்திற்கும் மிகக் குறைவாக விற்கப்பட்ட பழத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

…….....

.

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் மூன்றாவதாக அமைவது,

1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத்தளரத்தல்

31. கோவிட் - 19 வைரஸ் நோயில் இருந்து எம்மைப் பாதுகாக்க உதவும் செயற்பாடுகளில் ஒன்று,

1) சமூக இடைவெளியைப் பேணுதல்
2) தலைக் கவசம் அணிதல்
3) உணவைப் பகிர்ந்து உண்ணுதல்

32. பௌத்தர்களுக்கு மட்டும் உரித்தான ஊர்வலம் எது?

1) ஆடிவேல் ஊர்வலம் 2) தலதா ஊர்வலம் 3) மீலாத் ஊர்வலம்

www.lkedu.lk



33. இலங்கையை இறுதியாக ஆட்சி செய்த வெளிநாட்டவர் யார்?
1) போர்த்துக்கேயர் 2) ஆங்கிலேயர் 3) ஒல்லாந்தர்

34. வெள்ளை நிறத்தை மட்டும் கொண்ட பூக்களின் தொகுதி,
1) போகன் விலா, வெட்சி 2) நித்தியகல்யாணி, மல்லிகை 3) செவ்வந்தி, சூரியகாந்தி

35. சூழல் நேயமான பூச்சிநாசினியைத் தயாரிப்பதற்குப் பொருத்தமானது
1) பப்பாசி வித்து 2) வெள்ளைப் பூடு 3) இலுப்பை விதை

36. வாயினால் உணவினை உண்டு வாயினால் கழிவினை வெளியேற்றும் பிராணி.
1) வெளவால் 2) பல்லி 3) ஆந்தை

37. மண்ணுக்கு இரசாயனப் பசளை இடுவதனால் அழிவடையும் பிராணி எது?
1) மண்புழு 2) பாம்பு 3) தவளை


38. சோடா மூடியைத் திறக்க உதவும் கருவி
1) 
2) 
3) 

39. "SLDA" தரச் சான்றிதழ் காணப்படும் பொருள்,
1) ரின்மீன் 2) தீப்பெட்டி 3) பற்பசை

40. ஏப்ரன் ஒன்றைத் தைக்கும்போது அதன் அலங்காரத்திற்குப் பயன்படும் தையல் யாது?
1) கம்பளித் தையல் 2) சோம் தையல் 3) சங்கிலித் தையல்

41. ஒருவருக்குப் பாம்பு தீண்டியவுடன் செய்யக்கூடிய முதலுதவி,
1) காயத்தை சவர்க்காரமிட்டு ஓடும் தூய நீரினால் கழுவுதல்
2) காயமுள்ள இடத்தை நூலால் இறுக்கிக் கட்டுதல்
3) காயமுள்ள இடத்திற்கு எண்ணெய் பூசுதல்.

42. யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு
1) அனோபிலிஸ் 2) ஈடிஸ் 3) கியூலெக்ஸ்

43. 
இவ் உபகரணத்தின் பெயர்
1) நீர்க்குழாய்
2) நீர்ச் சில்லு
3) நீர் மட்டம்

44. நீர் விரயமாகும் சந்தர்ப்பம்
1) குழாய்களில் வெடிப்புகள் காணப்படல்
2) நீருடன் கழிவுகள் சேராதுவிடல்
3) நீரை அளவாகப் பெற்றுக்கொள்ளல்

www.ikedu.lk

45. பொதுப்போக்குவரத்து சாதனங்களால் நாம் பெறும் அனுகூலம்.
1) பாதுகாப்பாகப் பயணிக்க முடியாதிருத்தல்
2) குறைந்த செலவில் பயணிக்க முடிதல்
3) பொருட்களைக் கொண்டு செல்லமுடியாது

46. வாகனத்தில் பயணஞ் செய்யும்போது கட்டாயம் அணிய வேண்டியது.
1) இடுப்புப்பட்டி 2) ஆசனப்பட்டி 3) கால்ப்பட்டி

47. வீட்டுத் தோட்டத்தைச் சுற்றி வேலி அமைக்க கதிகாலாகப் பயன்படுத்தாத தாவரம்.
1) முள்முருங்கை 2) வேம்பு 3) கிளிசறியா

48. இரு பற்சில்லுகளை இணைக்கும் சங்கிலி
1) அந்தமில் சங்கிலி 2) கைச்சங்கிலி 3) அளவுநாடா

49. விசேடமான ஏதேனும் குறைபாட்டைக் கொண்ட நபர்களைக் காணும்போது செய்யவேண்டியது,
1) உதவி 2) அலட்சியப்போக்கு 3) குறைகளைச் சுட்டிக் காட்டுதல்

50. 

அருகிலுள்ள படம் குறிப்பது
1) மழை நிலத்தில் விழும்போது ஏற்படும் மாற்றம்
2) மழை நிலத்தில் விழும்போது மழையில் ஏற்படும் மாற்றம்
3) மழை வீழ்ச்சியை அளத்தல்

51. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாக்க மிகவும் உகந்த முறை
1) மரத்தின் கீழே நிற்றல் 2) வீட்டில் இருத்தல் 3) சமவெளியில் உலாவுதல்

52. நுளம்பின் பெருக்கத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளில் ஒன்று,
1) சூழலைத் துப்பரவாக வைத்திருத்தல்
2) நீரைத் தேக்கி வைத்திருத்தல்
3) யோக்கட் கோப்பைகளை கண்ட இடங்களில் வீசுதல்

53. சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கான நடவடிக்கை
1) குப்பை கூளங்களை எரித்தல்
2) குப்பைகளை விரும்பிய இடத்தில் எறிதல்
3) குப்பைகளைக் கூட்டுப் பசளை ஆக்குதல்

54. தபாற் பெட்டியில் குறிக்கப்பட்டிருப்பது.
1) உற்பத்தி செய்த ஊடகம் 2) தபால் எடுக்கும் நேரம் 3) தயாரித்தவர் பெயர்

55. நவீன தொடர்பு சாதனத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும் நன்மை.
1) உடனடியாக தகவல்களைப் பெறல்
2) கற்றல் செயற்பாடு பாதிக்கப்படும்
3) பணம் வீண்விரயமாகும்.

www.lkedu.lk

56. 


இவ் அலங்காரத்தின் பெயர்

1) கொடி அலங்காரம்
2) சுவர் அலங்காரம்
3) பலாப்பெத்தி அலங்காரம்

57. "தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்பமுடியும்" எனக் கூறியவர்.

1) 


2) 


3) 


58. மீனெண்ணெய், முட்டை, பால் என்பவற்றில் அதிகமாக உள்ள போசணைக்கூறு எது?

1) விற்றமின் A 2) விற்றமின் C 3) விற்றமின் D

59. பின்வரும் மின்சுற்றுக்களில் மின்குமிழ் ஒளிரக்கூடிய மின் சுற்று எது?

1) 

2) 

3) 

60. "கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க நான் பின்பற்றிக் கொண்டிருக்கும் வழிமுறைகள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

(i) ……..

……..

(ii) ……..

……..

(iii) ……..

……..

***

www.kedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிகழ்நிலைப் பரீட்சை 6

தரம் 5 **புள்ளித்திட்டம்**

வினாத்தாள் I (விடைகள்.)

1) 2	11) 2	21) 3	31) 3
2) 1	12) 1	22) 1	32) 3
3) 1	13) 2	23) 1	33) 3
4) 3	14) 3	24) 2	34) 2
5) 2	15) 3	25) 2	35) 1
6) 3	16) 3	26) 2	36) 2
7) 3	17) 2	27) 1	37) 1
8) 2	18) 2	28) 1	38) 2
9) 1	19) 2	29) 1	39) 1
10) 2	20) 2	30) 3	40) 1

வினாத்தாள் II (விடைகள்.)

(1) (i) செல்பேசி அலைகள் (1 புள்ளி)
(ii) வைரஸ், பாக்டீரியாக்கள் (1 புள்ளி)
(iii) சின்ன சின்ன (1 புள்ளி)
(iv) தீமைகளை (1 புள்ளி)
(v) சிட்டுக்குருவிகள் (1 புள்ளி)
(vi) சிட்டுக்குருவிகளை / சிட்டுக்குருவிகள் அழிவதை (1 புள்ளி)

(2) பிரகாசித்தன (1 புள்ளி)

(3) அவன் தனது நண்பனுடைய செயலைக் கண்டு தலை கவிழ்ந்தான். (1 புள்ளி)

(4) i) ✓ (1 புள்ளி)
ii) × (1 புள்ளி)
iii) ✓ (1 புள்ளி)
iv) ✓ (1 புள்ளி)

(5) சங்கர் தனது தாயைப் பார்த்து, "நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே" எனக் கேட்டான். (1புள்ளி)

(6) i) அளவறிந்து
ii) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது (2 புள்ளிகள்)

(7) i) வளம்
ii) உரை (2 புள்ளிகள்)

(8) மாணவர்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றார்கள். (1புள்ளி)

(9) இளைஞன் (1புள்ளி)

(10) i) மலைச்சாரல் ஆரம்பப் பிரிவு மாணவர்களின்
ii) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொற்றோர், பழையமாணவர்கள் போன்றவர்கள்
iii) புதிய கேட்போர் கூடம் (3புள்ளிகள்)

www.lkedu.lk

(11) i) ஆறு
ii) கல் (2புள்ளிகள்)

(12) i) Bicycle
ii) National Flag (2புள்ளிகள்)

(13) i) They are in the Canteen (1புள்ளி)
ii) I want to sing (2புள்ளிகள்)

(14) ஞாயிறு / ஞாயிற்றுக்கிழமை (1புள்ளி)

(15) எனக்கு இரண்டு அண்ணாமார் இருக்கிறார்கள் (1புள்ளி)

(16) 6229 (02 புள்ளிகள்)

(17) ஐம்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது (02 புள்ளிகள்)

(18) 5099,5409,5709 (02 புள்ளிகள்)

(19) 26,32,38, 44,50 (02 புள்ளிகள்)

(20) i) 1984
ii) 108 (04 புள்ளிகள்)

(21) ஏதாவது ஆறுமுக்கோணங்களுக்கு நிறந்தீட்டுக. (02 புள்ளிகள்)

(22) 12 : 30 (02 புள்ளிகள்)

(23) 1041 (02 புள்ளிகள்)

(24) i) 555.00
ii) 775.00 (04 புள்ளிகள்)

(25) 650 லீற்றர் (02 புள்ளிகள்)

(26) 12kg 200g (02 புள்ளிகள்)

(27) 13km 100m (02 புள்ளிகள்)

(28) i) சதுரமுகி
ii) 12 (02 புள்ளிகள்)

(29) i) பொருத்தமாக நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக.
ii) 7 (02 புள்ளிகள்)

(30)	1	(40)	3	(50)	1
(31)	1	(41)	1	(51)	2
(32)	2	(42)	3	(52)	1
(33)	2	(43)	2	(53)	3
(34)	2	(44)	1	(54)	2
(35)	2	(45)	2	(55)	1
(36)	1	(46)	2	(56)	1
(37)	1	(47)	2	(57)	3
(38)	3	(48)	1	(58)	3
(39)	3	(49)	1	(59)	1

(30 புள்ளிகள்)

(60) பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. (06 புள்ளிகள்)

*முழு விடைத்தாளையும் கவனத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதியிருப்பின் **2 புள்ளிகள்** வழங்குக.

www.lkedu.lk